செ.வெ.எண்: 13-2020 நாள்: 04.02.2020

# பத்திரிக்கை செய்தி

**விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டத்திற்குட்பட்ட அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்..**

இன்று (04.02.2020) விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டத்திற்குட்பட்ட அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கண்டாச்சிபுரம் வட்டத்திற்குட்பட்ட அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நெல், மக்காச்சோளம், கம்பு, பச்சைப்பயிர் மற்றும் உளுந்து உள்ளிட்ட வேளாண் விளைபொருட்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கினையும் மற்றும் ஏல விவரத்தினையும் ஆய்வு செய்தார். ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு விற்பனை செய்ய வரும் விவசாயிகளுக்கு கணினி மூலம் நுழைவுச்சீட்டுகள் வழங்கப்படும் இடத்தினையும், விவசாயிகள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட வேளாண் விளைபொருட்கள் முறையாக எடை போடப்படுகிறதா என்பதையும், ஆய்வு செய்தார். மேலும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் அறிவிப்புப் பலகையினை வைக்க வேண்டும் என அறிவுறுத்தினார். ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் உள்ள வேளாண்மை விளைபொருட்கள் சரியான முறையில் ஏலம் மூலம் சந்தைப்படுத்தப்படுகிறதா என்பதையும், வேளாண்மை விளைபொருட்களை எளிய முறையில் சந்தை படுத்துவதற்கு இணையதள வசதி முறையாக செய்யப்பட்டுள்ளதா என்பதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனை தொடர்ந்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத்தொகையினை உடனடியாக முறையாக வழங்க வேண்டும் என மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட செயலாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.கருணாநிதி, கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் திருமதி.ஜெயலட்சுமி, மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட செயலாளர் திரு.ஆறுமுகராஜன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.